செ.வெ.எண் - 322 /2016 நாள்: 01-06-2016

①

# மேற்பார்வைபொறியாளர் அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு பகுதிகளான விளவங்கோடு தாலுகா மற்றும் கல்குளம் தாலுகாவின் ஒரு பகுதிக்கு குழித்துறை, மார்த்தாண்டம் மற்றும் முஞ்சிறை துணை மின் நிலையங்களிலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்கண்ட துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் 110 கி.வோ மின்பாதையானது சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டதாகும். மிகவும் பழமையான காரணத்தால் மேற்கண்ட பாதையில் அடிக்கடி மின்தடைகள் ஏற்பட்டு வருகிறது இதனை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட 40 கோபுரங்களின் வழியாகசெல்லும் சுமார் 10 கி.மீ பழமையான ஒரு மின்பாதையை புதுப்பித்து இருவழி மின்பாதையாக மாற்றுவதற்கான பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்கண்ட பணிவருகின்ற 30.05.2016 முதல் 03.06.2016 வரை நடைபெற உள்ளதால் மேற்கண்ட நாட்களில் குழித்துறை, முஞ்சிறை, மற்றும் மார்த்தாண்டம் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளுக்கு தக்கலை, பேச்சிபாறை, வீயன்னூர், செம்பொன்விளை மற்றும் கருங்கல் துணை மின் நிலைய பகுதிகளிலிருந்து மாற்று மின் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்கண்ட துணை மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றி மற்றும் கடத்திகளில் பழுது ஏற்படாமல் இருக்க தேவைக்கேற்ப குறுகிய இடைவெளிகளில் சுழற்சி முறையில் மின்தடை ஏற்படவாய்ப்புகள் உள்ளன. எனவே விளவங்கோடு மற்றும் கல்குளம் தாலுகாவின் சில பகுதிகளுக்கு அவ்வப்போது ஏற்படும் மின்தடைக்கு நிரந்தர தீர்வு காண மேற்கண்ட பணி அத்தியாவசியம் என்பதால் பொது மக்கள் வர்த்தகர்கள் மற்றும் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளளப்படுகிறது.

மேலும் மேற்கூறிய மின்பாதைக்கு இடையூறாக இருக்கும் மரக்கிளைகளை அகற்றும் பணியும் மேற்கொள்ளப்படயிருப்பதால் அதற்கும் பொது மக்கள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் மேற்கண்ட காலத்தில் ஏதாவது மின் தடை ஏற்படுமாயின் தகவல் தெரிவிக்க பொது மக்கள் கீழ் கண்ட தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| | தொலைபேசி எண் | அலைபேசி எண் |
|---|---|---|
| செயற்பொறியாளர்/விநியோகம்/குழித்துறை | 04651-261306 | 9445854531 |
| செயற்பொறியாளர்/விநியோகம்/தக்கலை | 04651-250718 | 9445854514 |
| உதவி செயற்பொறியாளர்/விநியோகம்/ குழித்துறை | 04651-260227 | 9445854533 |
| உதவி செயற்பொறியாளர்/விநியோகம்/ புதுக்கடை | 04651-235199 | 9445854541 |
| மார்த்தாண்டம் 110/11கி.வோ துணை மின்மின் நிலையம் | 04651-271140 | 9445854532 |
| குழித்துறை 110/11கி.வோ துணை மின் நிலையம் | 04651-260206 | 9445854562 |
| முஞ்சிறை 110/11கி.வோ துணை மின் நிலையம் | 04651-235199 | 9445854563 |
| கருங்கல் 110/11கி.வோ துணை மின் நிலையம் | 04651-266799 | 9445854544 |

மேற்பார்வை பொறியாளர்
கமிபவ/நாகர்கோவில்

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்